## ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

# நாடகக் கலைஞன் நா. கிருபாகரன்



2018ம் ஆண்டு உலக மொழிபெயர்ப்பு தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றிய 'தான் விரும்பாத் தியாகி' என்ற மொழிபெயர்ப்பு நாடகத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அன்டன் செக்கோவ் எழுதிய A Tragedian in spite of himself என்ற நாடகத்தின் தமிழாக்கம் அது. இரு பாத்திரங்கள் கொண்ட ஓரங்க நாடகம். சைக்கிள், சூட்கேஸ், தாச்சி, அரிக்கன் லாம்பு, பியர் போத்தல்கள், சப்பாத்தும் பெட்டி என்று மூட்டை முடிச்சுக்களுடன் பாரத்தைச் சுமக்க முடியாமல் சுமந்தபடி நண்பர் வீட்டுக்கு வந்து தன் வாழ்வின் சுமையையும் துயரத்தையும் சொல்லும் நாடகம். கோபம், ஏக்கம், வெறுப்பு, நகைச்சவை என பல்சுவைகள் நிறைந்த 40 நிமிட நாடகத்தின் 90 வீதமான வசனங்களை அப்பாத்திரமே பேசும். நண்பர் வீட்டில் தன் ஒவ்வொரு சுமையையும் இறக்கியபடி 'இனியும் என்னாலை ஏலாது. நீ எனக்கொரு துப்பாக்கி தா' என்று ஆரம்பித்து தொடர்ச்சியாக வசனங்களைப் பேசி பல்வேறு உணர்வலைகளை முகத்தில் தோற்றுவித்துப் பார்வையாளர்களைத் தன் கட்டுப்பாட்டுள் வைத்திருந்தார் அந்த அதிசய நடிகர்.

இன்னொரு தடவை திருநெல்வேலி குழந்தை சண்முகலிங்கம் மாஸ்டர் வீட்டில் நடைபெற்ற 'அன்டிகனி' நாடக ஒத்திகை பார்த்தேன். அந்நாடகத்தில் கிறேயோன் மன்னனாக அதே நடிகர் நடித்திருந்தார். பார்வையாளர்களுக்கு முதுகைக் காட்டியபடி மேடையின் பின்பக்கம் சென்று சடாரென்று முகத்தை மட்டும் திருப்பிக் கொண்டு ஏற்ற இறக்கத்தோடு அவர் வசனங்களைப் பேசிய விதம் என்னை ஆச்சரியப்படுத்தியது.

தான் ஏற்றுக்கொண்ட பாத்திரங்களுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக நடிப்பு, வசன உச்சரிப்பு, மனனம் என்பதற்கு அப்பால் மேடை உத்திகளையும் வெகு லாவகமாகப் பயன்படுத்தி தனிமுத்திரை பதிக்கும் ஆற்றல் கொண்ட கலைஞர் இவர். இசை நாடகம், நவீன நாடகம் என அரங்கியலின் இரு வேறு எல்லைகளைத் தொட்ட இந்த அற்புதமான கலைஞர் இணுவில் நா.கிருபாகரன் அவர்களை ஆழத்துமுத்துக்களில் பதிவிடுவதில் தாய்வீடு மகிழ்வுறுகிறது.

இணுவில் என்றதும் இசை சார்ந்த கலைஞர்கள் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாது. இணுவில் கந்தசுவாமி கோயிலை மையப்படுத்தி இடம்பெறும் இசைவேள்விகளைக் காண மக்கள் வெள்ளம் அலை மோதும். குறிப்பாக இந்தியாவிலிருந்து வருகின்ற பாடகர்களும், தவில் - நாதஸ்வரக் கலைஞர்களும் இக்கோயிலில் கச்சேரிகள் நடத்துவதைப் பெருமையாகக் கொள்ளும் அளவுக்குச் சிறப்புப் பெற்றது.

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞர் கிருபாகரன் தன் ஊருக்கே உரித்தான இசை ஊடாகவே அரங்கினுள் கால்பதித்தார். பரமானந்தா சனசமூக நிலையத்தில் நடைபெற்ற 'கிழக்கு வெளுக்கிறது' என்ற தாளலய நாடகத்தில் இவர் முக்கிய வேடமேற்றிருந்தார். ந. சிதம்பரேஸ்வரன் இந்நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்திருந்தார். இணுவில் மார்க்கண்டு நாகையா, செல்லையா மனோன்மணி ஆகியோரின் மகனான இவர் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை (மத்திய கல்லூரி)யில் ஆரம்பக் கல்வியையும் யாழ்.இந்துக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றவர். மதுவரித் திணைக்களத்தில் உயரதிகாரியாகப் பணிபுரிந்து வரும் இவர், நாடகக்கலையில் தீவிரமாக இயங்கி வருவதோடு சமூகநல செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

இணுவில் கந்தசுவாமி கோயிலைச் சார்ந்து அதன் அருகே இயங்கிவரும் இளம் தொண்டர் சபை இணுவில் மக்களுக்கு குறிப்பாக கலைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். கடந்த 40 வருடங்களாக பணியாற்றிவரும் இச்சபை முன்பள்ளி, இசை - நாட்டிய வகுப்புகள், சமய தீட்சை, சமயம் சார்ந்த போட்டிகள், சமய விழாக்கள் போன்ற பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறது. உள்ளக அரங்கு போன்ற வசதிகள் கொண்ட இளம் தொண்டர் சபை கலை மேடையேற்றங்களுக்கு உந்துசக்தியாக இருந்து வருகிறது. கிருபாகரனின் ஆரம்பகால இசை நாடகங்களின் தோற்றுவாயாக இச்சபையே இருந்துள்ளது.



இளம் தொண்டர் சபையினர் வருடாவருடம் நடத்தும் சரஸ்வதி பூசை விழாவிலேயே இவரது முதல் இசை நாடகமான 'பக்த நந்தனார்' மேடையேறியது. இதில் நந்தனாராக இவர் வேடமேற்றுப் பாடி நடித்திருந்தார். சங்கீத வித்துவான் மா. ஸ்ரீரங்கநாதன் நெறியாள்கை செய்த இந்நாடகம் இதுவரை ஏறத்தாள 50 தடவைகளுக்குமேல் மேடையேற்றப்பட்டுள்ளது. 2017ல் ஆளுநர் சந்திரசிறி நடத்திய நாடகப் போட்டியில் இந்நாடகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. பிரபல நாடகக் கலைஞன் தைரியநாதன் அவர்களின் 'மயான காண்டம்' முதற்பரிசைப் பெற்றிருந்தது. யுத்த காலத்தில் ஈவினை என்ற இடத்துக்குச் சென்று இசைநாடகக் கலைஞர் மார்க்கண்டு அவர்கள் சொல்லச் சொல்ல பக்த நந்தனார் நாடகப் பிரதியை இவர்கள் எழுதி வந்தது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக மேடையேற்றப்பட்ட 'ஸ்ரீவள்ளி' என்ற இசை நாடகத்தில் இவர் வேலன், வேடன், கிழவன் என வேடமேற்றுப் பாத்திரங்களுக்குச் சிறப்புச் செய்தார். இந்நாடகம் சண்டிலிப்பாய் வி.என். செல்வராஜா, தெல்லிப்பளை உருத்திராபதி ஆகியோரின் கூட்டு முயற்சியால் மேடையேற்றப்பட்டது. தொடர்ந்து இளம் தொண்டர் சபையினர் மேடையேற்றிய 'அரிச்சந்திர மயான காண்டம்' இசை நாடகத்தில் சத்தியகீர்த்தியாக இவர் வேடமேற்றார். த. சிவகுமாரன் நெறிப்படுத்திய இந்நாடகத்தில் இ. பாலராஜன் அரிச்சந்திரனாகவும், ச. பத்மநேசன், ப. அருமைநாதன் ஆகியோர் சந்திரமதியாகவும் மற்றும் செ. செந்தில்வேல், செ. உதயகுமாரன் ஆகியோரும் நடித்திருந்தனர். மன்னனைத் தேடி காட்டுக்கு வரும் அமைச்சர் சத்தியகீர்த்தி தன் மன்னன் அரிச்சந்திரனை மயானத்தில் சந்திக்கும் காட்சி பார்வையாளர்களை நெகிழ வைக்கும்.

தொண்டர் சபையினர் தொடர்ந்து மேடையேற்றிய 'சத்தியவான் சாவித்திரி' என்ற இசை நாடகத்தில் இவர் சத்தியவானாகத் தோன்றி பாடி நடித்து மக்களைப் பரவசப்படுத்தினார். த. சிவகுமாரன் நெறிப்படுத்திய இந்நாடகத்தில் இ. பாலராஜன் யமனாகவும் ச. பத்மநேசன், ப. அருமைநாதன் ஆகியோர் சாவித்திரியாகவும் பாத்திரமேற்றிருந்தனர்.

மேலும் 'காத்தவராஜன்' என்ற சிந்துநடைக் கூத்திலும் காத்தவராஜனாக வேடமேற்று இவர் பாடி ஆடி நடித்திருந்தார். இவ்வாறு கலைஞர் கிருபா பங்கேற்ற இந்த இசைநாடகங்கள் ஏறத்தாள 200 தடவைகளுக்குமேல் இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.


இசை நாடகங்களுடன் தன்னை ஈடுபடுத்திவரும் அதே நேரம் இவர் யாழ். நாடக அரங்கக் கல்லூரியுடன் இணைந்து நவீன அரங்கியலாளன் என்ற புதிய பரிமாணத்தைத் தொட்டார். அரங்கக் கல்லூரி தயாரித்து, S.T. அரசையா நெறியாள்கை செய்த 'பாஞ்சாலி சபதம்' என்ற பா நாடகத்தில் பாரதியார் வேடமேற்றதன் மூலம் நடிப்புலகில் புதிய பாதையில் பயணிக்க ஆரம்பித்தார். அடுத்து, அரங்கக் கல்லூரி தயாரித்த 'கண்டனன் சீதையை' என்ற நாடகத்தில் அனுமனாக இவர் வேடமேற்றிருந்தார். இந்நாடகத்தில் தை. ஜஸ்டின் ராமராகவும், தை. சுஜாநந்தி சீதையாகவும், எஸ். கிருபானந்தன் இராவணனாகவும் நடித்திருந்தனர். அருணாச்சலக் கவிராஜர் எழுதிய ராமநாடகக் கீர்த்தனைகளை மூலமாகக் கொண்டு குழந்தை சண்முகலிங்கம் அவர்களால் தொகுக்கப்பட்டு, நெறியாள்கை செய்யப்பட்ட இந்நாடகத்தை தவநாதன் ரொபேட் அவர்கள் தன் இசையால் மெருகூட்டியிருந்தார்.

வெளிநாட்டு மோகம், சீதணப் பிரச்சினை என்பவற்றை மையமாகக்கொண்டு குழந்தை சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 'உறவுகள்' என்ற நாடகத்தில் இவர் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தார். க. ரதிதரன் நெறியாள்கை செய்த இந்நாடகத்தில் இவருடன் க. ரதிதரன், ந. தவசோதிநாதன், யோகேஸ்வரன் யாழினி, கேசவன் ஜீவாயினி, கே. பிரகாஷ், சபா அனுஜன் ஆகியோரும் நடித்திருந்தனர். எள்ளலுடன் கூடிய சீரிய நாடகமான இது, இதுவரை பல மேடையேற்றங்களைக் கண்டுள்ளது.

நாலாம் நூற்றாண்டில் பிரபல கிரேக்க நாடகாசிரியரான சோபகிளிஸ் (sophocles) எழுதிய அன்டிகனி (Antigone) என்ற துன்பியல் நாடகம் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் மொழிபெயர்ப்பில் நூலாக வெளிவந்துள்ளது. அரங்கக் கல்லூரி மேடையேற்றிய இந்நாடகத்தில் கலைஞர் கிருபா மன்னன் கிறேயோனாக வேடமேற்று அசத்தினார். க. ரதிதரன் நெறியாள்கை செய்த இந்நாடகத்தில் பேரின்பகுமார் ஸ்ரீலேகா அன்டிகனியாக நடித்திருந்தார். சோபகிளிசின் இன்னுமொரு புகழ்பெற்ற நாடகமான 'இடிபஸ்' (Oedipus) நாடக ஒத்திகைகள் தற்போது மும்மரமாக இடம்பெற்று வருகிறது.

யாழ். நாடக அரங்கக் கல்லூரி மேடையேற்றிய அன்டன் செக்கோவின் 'தான் விரும்பா தியாகி' நாடகம் என் வாழ்நாளில் மறக்கமுடியாத நாடகங்களுள் ஒன்றாக அமைந்து போனது. குழந்தை சண்முகலிங்கம் மொழிபெயர்ப்பிலும் க. ரதிதரன் நெறியாள்கையிலும் மேடையேறிய இந்நாடகத்தில் கிருபாவுடன் இணைந்து ந.தவசோதிநாதனும் நடித்திருந்தார். இது வரை இந்நாடகம் 15 தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளது.

மேடையில் தோன்றியதும் எல்லோரையும் வசீகரிக்கவல்ல ஆற்றல் கொண்ட அற்புதமான கலைஞர் நா. கிருபாகரன்.



sriskandan@thaiveedu.com